செய்தி வெளியீடு எண்: 231 நாள்: 15.05.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இன்று (15.04.2013) தலைமைச் செயலகத்தில், தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு தமிழுக்கு நற்தொண்டாற்றிவரும் தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு 2013–ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருதினையும், கவிஞர் முத்துலிங்கம் அவர்களுக்கு கபிலர் விருதினையும், பேராசிரியர் ம.வே.பசுபதி அவர்களுக்கு உ.வே.சா விருதினையும், முனைவர் பால.இரமணி அவர்களுக்கு கம்பர் விருதினையும், முனைவர் ம.லோகநாயகி அவர்களுக்கு சொல்லின் செல்வர் விருதினையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2012–ஆம் ஆண்டில், தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் வாழும் தமிழர்கள், தங்களது பண்பாட்டு வேர்களைக் காத்து, தமிழ் மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றை போற்றி வளர்த்திடும் வண்ணம் தமிழ்ச் சங்கங்கள் / குழுமங்கள் போன்ற அமைப்புகளை உருவாக்கி சிறப்பாக செயல்படச் செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த்தாய் விருதினை ஏற்படுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இன்று தலைமைச் செயலகத்தில், இவ்வாண்டு (2013)க்கான தமிழ்த்தாய் விருதை இந்தியத் தலைநகராம் புது டெல்லியில் சிறப்புடன் தமிழ்ப் பணியாற்றி வரும் தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கி, விருதுக்கான தொகை 5 லட்சம் ரூபாய், கேடயம் மற்றும் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.ஆர்.முகுந்தன், இணைச் செயலாளர் திரு.பி.இராகவன் ஆகியோரிடம் வழங்கினார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கபிலர் விருதை, மரபுச் செய்யுள் மற்றும் கவிதைப் படைப்புகளைப் புனைவதில் வல்லவரான கவிஞர் முத்துலிங்கம் அவர்களுக்கும், உ.வே.சா விருதை, ஓலைச் சுவடிகள் அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் கிடைத்தற்கரிய நூல்களைத் தொகுத்து தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில்

பதிப்புப் பணிகளை மேற்கொண்டுவரும் பேராசிரியர் ம.வே.பசுபதி அவர்களுக்கும், இவ்வாண்டு புதிதாக உருவாக்கப்பட்ட கம்பர் விருதை, கம்பராமாயணத்தின் உயரிய கருத்துக்களைப் பரப்பி வரும் தமிழறிஞரான முனைவர் பால. இரமணி அவர்களுக்கும், சொல்லின் செல்வர் விருதை, சிறந்த இலக்கியப் பேச்சாளரான முனைவர் ம. லோகநாயகி அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து விருதாளர்கள் ஒவ்வொருவரும் விருதுக்கான தொகை ஒரு லட்சம் ரூபாய், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து, சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்லூரி வளாகத்தில் இரண்டு வார காலம் நடைபெறவுள்ள ‘‘சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு புத்தகத் திருவிழா’’வினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் நூல் வெளியீடு மற்றும் தமிழ் நூல் விற்பனை மேம்பாட்டுக் குழுமப் பொறுப்பாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**
நாள்: 15.4.2013